**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி.**
**முன்னிலை: திரு.எஸ்.சக்திநாராயணமூர்த்தி பி.எஸ்.சி., எல்.எல்.பி.,**
**நீதித்துறை நடுவர், அறந்தாங்கி.**

**2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாள் திங்கட்கிழமை**

**MC.No.7/2023**

1. தாமரைச்செல்வி, (வயது 38)
   க/பெ. உதயக்குமார்.
2. ரித்திகா ஸ்ரீ, (வயது 12)
   த/பெ. உதயக்குமார்.
3. ரிஷிகா ஸ்ரீ, (வயது 10)
   த/பெ. உதயக்குமார்.

**மனுதாரர்களின் முகவரி:**
**நிரந்தர முகவரி:**
மங்களநாடு கிராமம்,
அறந்தாங்கி தாலுகா,
புதுக்கோட்டை மாவட்டம் ...... மனுதாரர்கள்

//எதிராக//

உதயகுமார்,
த/பெ. தங்கராஜ்,
நெல்லியடிக்காடு கிராமம்,
பேராவூரணி வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

..... எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.பெ.செ.சிவராசு, B.Com., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் தோன்றாதரப்பினராக இருந்தும், மனுதாரர் தரப்பு வாதுரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ........

**உத்தரவு**

மனுதாரரின் தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 125–ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:**

1.1) மனுதாரர் தரப்பு மனுவில், எதிர்மனுதாரர் தான் அவரது கணவர் என்றும்,

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 05.06.2011–ம் தேதி இருவீட்டார் சம்மதத்துடன் பேராவூரணி ஸ்ரீ நீலகண்டப்பிள்ளையார் ஆலயத்தில் திருமணம் நடைப்பெற்றது என்றும், திருமணத்தின்போது 6 பவுன் தங்க நகை மற்றும் தேவையான அனைத்து சீர்வரிசைகளும் எதிர்மனுதாரருக்கு மனுதாரரின் தாயாரால் கொடுக்கப்பட்டது என்றும், திருமணத்திற்கு பின் 1–ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் 2, 3 மனுதாரர்கள் பிறந்தார்கள் என்றும், திருமணத்திற்கு பின் எதிர்மனுதாரர் இல்லத்தில் குடும்பம் நடத்தி வந்துள்ளனர் என்றும், 3 மாதத்திற்கு பிறகு எதிர்மனுதாரர் கொஞ்சம் கொஞ்சமாக குணத்தில் வேறுபட்டு, குடிபோதையில் குடித்துவிட்டு வந்து வெறுக்கத்தக்க வகையில் பேசுவதும், நடத்துவதுமாக இருந்தார் என்றும், பல முறை 1, 2, 3 மனுதாரர்களை அடித்து துன்புறுத்தி 1–ம் மனுதாரரின் தாயார் வீட்டிற்கு விரட்டியுள்ளார்.

1.2) 1–ம் மனுதாரர் அவ்வப்போது நேரிலும், உறவினர்கள் மற்றும் பொது நபர்கள் வைத்தும் பஞ்சாயத்து செய்து சமாதானப்படுத்தி எதிர்மனுதாரருடன் குடும்பம் நடத்தி வந்துள்ளார் என்றும், இதனால் மனுதாரர்கள் எல்லையில்லாத மனஉளைச்சலுக்கும், வருத்தத்திற்கும் ஆளாகியுள்ளனர் என்றும், இந்நிலையில் கடந்த 12.11.2017–ம் தேதி 1–ம் மனுதாரரை இரவு வீட்டை பூட்டிவிட்டு அடித்து துன்புறுத்தி கொலை செய்ய முயற்சி செய்தார் என்றும், இரவு 2 மணியளவில் 1–ம் மனுதாரர் தனது தாயாரை போன் செய்து வரச்சொல்லி தாயார் வீட்டிற்கு சென்றுள்ளார் என்றும், அடுத்த நாள் 13.11.2017–ம் நாள் 1–ம் மனுதாரர் தனது தாயாருடன் பட்டுக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில்வ புகார் கொடுத்துள்ளார் என்றும், மேற்படி புகாரின் பேரில் எதிர்மனுதாரரை காவல் துறையினர் கண்டித்து அனுப்பினர் என்றும், அதன்பின்னிட்டு சில நாட்களே நன்றாக நடந்துகொண்டார் என்றும், 1–ம் மனுதாரரின் நன்நடத்தையில் சந்தேகப்பட்டு, 1–ம் மனுதாரரை வீட்டிற்குள் பூட்டி வைத்து கொடுமைப்படுத்துவதும், அக்கம்பக்கத்தினர் கேட்க வந்தாலும் அவருடன் 1–ம் மனுதாரரை சந்தேகப்படுவதுமாகவே எதிர்மனுதாரர் இருந்துவந்துள்ளார்.

1.3) 1–ம் மனுதாரர் 2–ம் மனுதாரருக்கு இதயத்தில் அடைப்பு இருப்பதாக அவருக்கு இருதய ஆப்ரேசன் செய்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்

என்றும், அங்கு வந்த எதிர்மனுதாரர் 1–ம் மனுதாரருடன் சண்டைபோட்டு 1–ம் மனுதாரரை அடித்துள்ளார் என்றும், அப்போது மருத்துவமனையில் இருந்த காவலாளி எதிர்மனுதாரரை அங்கிருந்து அனுப்பி வைத்துள்ளார். மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு வந்த மனுதாரரை பார்த்து, எதிர்மனுதாரர் காவலாளியை வைத்து விரட்டும் அளவிற்கு வந்துவிட்டாயா என்று கூறி 1–ம் மனுதாரர் மேல் மண்ணென்னையை ஊற்றி அவரை கொலை செய்ய முயன்றுள்ளார் என்றும், அங்கிருந்து தப்பித்து 1–ம் மனுதாரர் 2, 3 மனுதாரர்களுடன் தனது தாயார் வீட்டிற்கு வந்துள்ளார்.

1.4) எதிர்மனுதாரரின் செய்கையினால் 2, 3 மனுதாரர்கள் பயந்து அப்பா வேண்டாம் என்றும், தனது பாட்டி வீட்டிற்கே சென்றுவிடலாம் என்றும் கூறியுள்ளனர். 1–ம் மனுதாரர் தனது தாயார் வீட்டிற்கு வந்து தங்கி உறவினர் உதவியுடன் சென்னையில் உள்ள தனியார் விடுதியில் வேலைக்கு சேர்ந்து தனது குழந்தைகளை பராமரித்து வருகின்றார் என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர் இனிமேல் குடித்துவிட்டு மனுதாரர்களை துன்புறுத்தமாட்டேன் என்றும், சண்டைப்போடமாட்டேன் என்றும் 1–ம் மனுதாரரின் தயாரை சந்தித்து சமாதானம் பேசி 1–ம் மனுதாரரை ஊருக்கு வரவழைத்து பஞ்சாயத்து பேசி எதிர்மனுதாரர் வீட்டிற்கு அழைத்து சென்றுள்ளார் என்றும், இதன்பேரில் மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுடன் சென்றுள்ளனர்.

1.5) எதிர்மனுதாரர் திருப்பூருக்கு வேலைக்கு செல்வதற்காகவும், மொய்போட வேண்டும் என்று கூறி குழுவில் பணம் ஏற்பாடு செய்து தர கேட்டுள்ளார் என்றும், எதிர்மனுதாரர் வேலைக்கு சென்று பணத்தை கட்டிவிடுவார் என நம்பி மனுதாரும் ரூ.50,000/– லோன் எடுத்துக் கொடுத்துள்ளார். ஒரு மாதம் மட்டுமே திருப்பூரில் வேலைப் பார்த்து கடனை கட்டினார் என்றும், மீண்டும் மனுதாரரை கொடுமைப்படுத்தினார் என்றும், இதுநாள் வரையில் மனுதாரரின் அடிப்படை தேவைக்கோ, 2, 3 மனுதாரர்களின் அடிப்படை தேவைக்கோ எதிர்மனுதாரர் எதுவும் செய்யவில்லை என்றும், கடன் சுமையையும் 1–ம் மனுதாரருக்கு எதிர்மனுதாரர் ஏற்படுத்தியுள்ளார்.

1.6) 1–ம் மனுதாரருக்கு 12.11.2021–ம் நாள் அன்று தொண்டையில் கட்டி வந்து அறந்தாங்கி கமலக்கண்ணன் மருத்துவமனையில் ஆபரேசன் செய்யப்பட்டுள்ளது.

ஆபரேசன் செலவிற்கு 1−ம் மனுதாரர் தாலி செயினை விற்றும், மீத பணத்திற்கு கடன் வாங்கியும் எதிர்மனுதாரர் ஆபரேசன் செய்தார் என்றும், மேற்படி எதிர்மனுதாரரின் செய்கையினால் ஏமாற்றத்தையும், அவமானத்தையுமே சந்தித்த 1−ம் மனுதாரர் இனிமேலும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை என விவாகரத்து கோரி மாண்பமை அறந்தாங்கி சார்பு நீதிமன்றத்தில் HMOP 28/2022 என்ற நம்பரில் மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி மனுவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

1.7) எதிர்மனுதாரரின் செயல்பாடுகள் காரணமாக 1−ம் மனுதாரர் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாகி, அதனைத் தொடர்ந்து அடிக்கடி உடல்நலம் பாதிக்கப்பட்டு வருகின்றார் என்றும், மேலும் எவ்வித வேலைக்கும் செல்ல முடியவில்லை என்றும், 1−ம் மனுதாரருக்கு தொண்டையில் ஆப்ரேசன் செய்யப்பட்டுள்ளதால் அவருக்கு மருத்துவ செலவுகள் உள்ளது என்றும், எதிர்மனுதாரர் போதிய வசதி வாய்ப்புகளுடன் வாழ்ந்து வருகிறார் என்றும், எதிர்மனுதாரருக்கு விவசாய நிலங்கள் நிறைய உள்ளன என்றும், அதன்மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.50,000/−மும், வேலைக்கு செல்வதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/− வரை வருமானம் ஈட்டி வருகிறார். எனவே 1−ம் மனுதாரரின் உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மருந்து செலவுகளுக்கு ரூ.5000/−மும், 2, 3 மனுதாரர்களின் கல்வி, உணவு, இருப்பிடம் மருத்துவ செலவுகளுக்கு தலா ரூ.10,000/−மும், 2−ம் மனுதாரருக்கு இருதய ஆபரேஷன் செய்யப்பட்டுள்ளதால் அவருக்கு மருத்துவ செலவுகளுக்கு கூடுதலாக ரூ.5000/−மும் மொத்த ஜீவானாம்ச தொகையாக ரூ.30,000/− எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு வழங்கிட உத்தரவிட கோரி மனுதாரரால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பு ஆட்சேபனையின் சுருக்கம்:**

எதிர்மனுதாரர் தரப்பில் தோன்றாதரப்பினராக இந்நீதிமன்றத்தால் கருதப்பட்டு எவ்வித பதில் உரையும் தாக்கல் செய்யப்படவில்லை.

**3) இம்மனுவில் தீர்வு காணப்படவேண்டிய வினா யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதாகும்.**

**4) தீர்வு:**

4.1) மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது.

4.2) 1–ம் மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைப்பெற்று 2 பெண் குழந்தைகள் உள்ளது. எதிர்மனுதாரர் கணவன் மற்றும் தந்தை என்ற முறையில் 1–ம் மனுதாரரையும், 2, 3 மனுதாரர்களையும் காக்க வேண்டியது கடமையாகும். ஆனால் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜராகி மனுதாரர்களை கவனித்து வந்ததற்கான சாட்சிய சான்றாவணங்கள் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கபடவில்லை. மேற்கண்ட சூழ்நிலைகளை கருத்திற்கொண்டும், எதிர்மனுதாரருக்கு விவசாய நிலங்கள் நிறைய உள்ளன என்றும், அதன்மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.50,000/–மும், வேலைக்கு செல்வதன் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.20,000/– வரை வருமானம் ஈட்டி வருகிறார் என்பதை கருத்தில் கொண்டும், இந்நீதிமன்றம் மனுதாரர்களுக்கு உணவு, உடை, மருத்துவ செலவுகளுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) எதிர்மனுதாரர் ஒவ்வொரு மாதமும் ஆங்கில தேதி 5–ம் தேதிக்குள் வங்கி கணக்கு மூலமோ, இணையதள பரிவர்த்தனை மூலமோ, அல்லது மணியார்டர் மூலமோ அல்லது நேரிலோ செலுத்தவேண்டுமென்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் இன்று 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/–எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**//உண்மை நகல்//**

SAKTHINARAYANA MOORTHI S

Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2025.08.18 04:32:26 +0530

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**